# நரைவரிகள்

சிறு கதை தொகுதி



91822

JPL

C2600

சீவலி

சரசவி இளைஞர் கழக வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'NAGARAVASIGAL'

(Collection of Tamil Short Story)

First Edition
16th FEBRUARY 1992

Publication of:
SARASAVI YOUTH CLUB
Colombo-14

Printed at:
KAVITHA PRINTERS
107/3 Badaranayaka Mawatha
Colombo 12

Cover Art by:
S. JAYABALAN

Copy Rights:
JEEVAKAVI

price
Rs 25.00

Cat
PUBLIC LIBRARY
JAFFNA.
KOHA
JPL
பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
26-3-1993
91822
2600C.C
Vasantham Book House
Rs.
405, Stanley Rd., Jaffna.
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
91822C.C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே உள்ளவை


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | நகரவாசிகள் — (சிந்தாமணி 22-7-90) | 1. |
| 2. | அவள் போட்ட சபதம் — (மித்திரன் வாரமலர் 2-10-88) | 5 |
| 3. | ஏமாற்றங்கள் — (மித்திரன் வாரமலர் 4-12-88) | 11 |
| 4. | மௌனம் ஏனோ — (சிந்தாமணி 9-12-90) | 18 |
| 5. | தவறு யாரிடம் — (மித்திரன் வாரமலர் 12-3-89) | 25 |
| 6. | கொலையும் செய்வாள் பத்தினி — (இறுதியாக தீட்டியது) | 30 |


★ குறிப்பு:- என் அபிமானத்திற்குரிய வாசகர்களாகிய உங்களிடம் இருந்து இந்த நூலுக்கான விமர்சனங்களை எதிர்பார்க்கிறேன். அதனால் உங்கள் விமர்சனங்களை எழுதி அனுப்பவும் எமது அடுத்த வெளியீடான 'யாகங்கள்' கவிதை தொகுதியில் இவைகளை பிரசுரிப்போம்.

இப்படிக்கு
இவன்,
**ஜீவகவி**


103/B, Babapullai place
Grandpass Road
Colombo-14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத் தெய்வங்களுக்கு

 

பிஞ்சு வயதில்
இழந்திட்ட தந்தைக்கும்
கொஞ்சி என்னை
வளர்த்திட்ட அன்னைக்கும்
சமர்ப்பிக்கும் இவ்வாக்கம்
சிறுகதையாம்.
அன்னவர்தம் அன்பு, பாசம்
தொடர்கதையாம்.

91822

KOHA
JPL

## இந்நூல் காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௧

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.


## நடிகை குஷ்புவின் முன் அட்டையுடன்

புதிய திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்கள்— ஏ. எஸ். எம் நவாஸின் சினிமா பதில்கள், தென்னிந்தியக் கலைஞர்களின் முகவரிகள், சினிமாக் கட்டுரைகள் அடங்கிய

## 'சினிபோஸ்ட்'

சினிமா இதழ் ( திரை 2 ) விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விலை 7-50 ஆசிரியர்: ஏ. எஸ். எம். நவாஸ்
உதவி ஆசிரியர்: ஜீவகவி.

தேவையானோர் 1 ரூபாய் முத்திரைகள் 9 அனுப்புக.

# CENILAND

13, ST. JOSEPHS STREET, COLOMBO-14


## நகைச்சுவை

காதலன்: அன்பே; உனக்கு திருமணம் நிச்சயம் பண்ணிட்டாங்களாமே, ராத்திரியே ஓடிப்போயிடலாமா?

காதலி: வேண்டாங்க, எனக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை உங்களை விட வசதியானவராம்.

* * *

மனேஜர்: மாலா! உங்களிடம் தனியாக ஒரு விஷயம்!

டைப்பிஸ்ட்: தயங்காம சொல்லுங்கள், உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கேன்.

மனேஜர்: மத்தியானத்துக்கு வெறும் தயிர் சாதம்தான் கொண்டு வந்து இருக்கிறேன். நீங்கள் தொட்டுக் கொள்ள ஊறுகாயாவது, பொரியலாவது தரணும்.

(சிந்தாமணி 22-1-1989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்தத் தொகுதியில் இருக்கும் இச்சிறுகதைகள் பல்லாயிரக்கணக்கில் வெளிவரும் சிறுகதைகளுக்குள் இன்னுமொரு ஐந்து கதைகளாக-பத்தோடு பதினொன்றாகவே இருப்பதை நினைக்கையில் வருத்தமாகவே இருக்கிறது.

ஒரு சில எழுத்தாளர்களைப் போல் வாசகர்களைத் திருப்திப் படுத்தும் நோக்கில் எழுதாமல் சமூகத்தில்தான் காணும் இடர்பாடுகளை எடுத்துச்செல்லும் ஒரு யதார்த்த நோக்கு இவரிடம் காணப்படுகிறது.

ஜீவகவியின் இந்த ஆறு சிறுகதைகளையும் வாசித்த போது எனக்கு இரண்டு விதமான திருப்திகள் ஏற்பட்டன

பத்து பதினொன்று என்றில்லாமல் ஆறு மாத்திரமே என்பதில் ஒரு திருப்தி.

ஜீவகவியின் கூடுதலான கவனம் கவிதையில் இருப்பதால் 1984க்கும் 90க்குமான ஏழு வருடத்தில் எட்டு சிறுகதைகள் மாத்திரமே எழுதியுள்ளார். இதில் ஆறை சரி பார்த்து ஒரு தொகுதியாக்க முன் வந்ததன் மூலம் அவரை சலனப்படுத்தி விடும் ஒரு வாய்ப்பை இப்போதே எனக்குத் தந்துள்ளமையிலும் ஒரு திருப்தி.

அமைதியான-அடக்கமே உருவான இவருடைய எழுத்துக்களில் ஒரு எளிமையும் தெளிவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த ஆறு கதைகளுமே ஒரு பொதுவான இழையில் பின்னப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கு இச் சமூகம் இழைக்கும் கொடுமைகள் பற்றியே இவைகள் பேசுகின்றன. நகர வாசிகள் என்னும் கதையைத் தவிர்த்து ஏனையவைகள் திருமணமான குடும்பப் பெண்கள் மாமியார்-கணவன்-ஆகியோருக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் அடிமைகளாகவும் இருப்பதால் ஏற்படும் உள ரீதியான பாதிப்புக்கள் பற்றியே பேசுகின்றன.

ஜீவகவி என்னும் ஒரு இரக்க சுபாவமுள்ள மற்றவர்களின் துயரம் கண்டு சோகம் கொள்ளும் ஒரு மனித நேயனின் நியாயமான ஆதங்கம் கூட அவருடைய சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் மூலம் அனுப்பெறாமல் பலவீனப்பட்டுப் போனமைக்கான காரணிகளாக நான் முன்பு கூறிய காரணங்களையே கொள்ளலாம்.

நகரவாசிகள் கதையில் கூட அந்த இளம் பெண்ணுக்கு பஸ்ஸின் நெரிசலில் தரப்படும் இம்சைகள் பலமாக எதிர்க்கப்படவில்லை. அவள் பிறவியிலேயே ஊமை என்பதால் அந்த இம்சைகள் பொறுத்துக் கொள்ளப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது. உடன் பயணம் செய்யும் யாரோ ஒருவன் என்னும் போது வாய் ஊனம் ஒரு பொருட்டே இல்லை......

திடீரென வந்த விஷக் காய்ச்சலால் காது செவிடாகி விட்டது என்னும் காரணமும் மிகவும் செயற்கையாக ஒரு கதையில் சுட்டப்படுகிறது. (மௌனம் ஏனோ) இது போன்ற ஒரு மாயையான திருப்பத்தின் மூலம் பிரச்சினை சுமூகமாக்கப் படும்போது அந்தப் பிரச்சினையின் கடுமை வாசகனிடமிருந்து அன்னிடப்படுத்தப்படுகின்றது.

இப்படிய னமேம் போக்கான ஒரு கனவுலகத் தீர்வின் மூலம் கதையைச் சுபமாக்கி வாசிப்போரை களிப்பிலாழ்த்தும் சிறுகதைகளுக்கு கல்கியும் அவர் வழி வந்தோர்களுமே முக்கியமானவர்கள்.

இவர்களையே ஜீவகவி கூடுதலாகவும் ஒரு ஆதர்சத்துடனும் வாசித்து வந்திருக்கின்றார் என்று துணிந்து கூறலாம். இவர்களை வாசிக்கவேண்டாம் என்று நான் கூறவில்லை.

'நானும் கதை எழுதினேன் என்று சொல்லிக்கொள்வதில் இருந்து வேறுபட்டு இத்துறையை வளப்படுத்தவல்ல சிறு கதைகளையும் ஜீவகவி எழுதியுள்ளார்' என்று பேச வைக்கும் சிறுகதைகளை இவரிடமிருந்து எதிர்பாக்க இவர்களை மட்டுமே வாசிப்பது போதாது என்பதை மட்டுமே இப்போதைக்கு என்னால் கூறமுடியும்.

நெறிப்படுத்தப்பட்டால் நல்ல சிறு கதைகளைப் படைக்கக் கூடிய ஆற்றல் இவரிடம் இருக்கிறது என்பது எனது நம்பிக்கை.

தெளிவத்தை ஜோசப்

95 ரஜமல்வத்தை
கொழும்பு-15
1-12-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

# இலக்கிய வானில் சிறகு விரித்த ஜீவகவி

சிறகுகளை விரித்து சுதந்திரமாக பறக்க நினைக்கும் சிட்டுக் குருவிகளை தட்டிக்கொடுத்து ஊக்குவிக்க வேண்டியது நமது சமூக கடமையாகும். இலக்கிய வானில் சிறகுகளை விரித்திருக்கும் ஜீவகவியின் ஆற்றல் அறிமுகமாக வேண்டியது காலத்தின் தேவையாகும்.

புதுகவிதா வானிலே பறந்த இவர், இப்பொழுது 'நகரவாசிகள்' என்ற கதைதொகுதியின் மூலம் சிறுகதை உலகிலும் கால் பதிக்க முனைந்துள்ளார். இவரது எழுத்துக்களில் ஒரு நம்பிக்கை ஒளிவிடுகிறது.

இந்த சமூகத்தின் அநியாயங்களை அடித்தளம்கொண்டு இவரது கதைகள் அமைந்துள்ளன. இங்கு மனிதர்கள் விலைப் பொருள்கள் இதனைக் கண்டு இந்த இளைய உள்ளம் வேதனைப்படுகிறது அதன் விளைச்சல் தான் இந்த கதைகள்.

இவரது எழுத்துத் திறமையை மேலும் வளர்த்து இலக்கிய வாசகர்களுக்கு நன்மை பயக்க வாழ்த்துகிறேன். தொடரட்டும் இவரது இலக்கிய பணிகள்.

அன்புடன்
அந்தனி ஜீவா

57 மகிந்த பிளேஸ்
கொழும்பு-6
21-12-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுக உரை

# சிந்தனை வெள்ளம் பூமியை நிரப்பட்டும்

கலையுலகிற்குக் கவிஞராக அறிமுகமானவர் ஜீவகவி. அன்று கலை நிலத்தில் முயற்சிகளை விதைத்துக் கவிதைகளை அறுத்தவர், இன்று சிறுகதைகளையும் சேர்த்தே அறுத்துக்கொண்டிருக்கிறார்.

1984ம் ஆண்டு இவரது முதலாவது சிறுகதையான 'நள்ளிரவில் வந்த உருவம்' தினசரி மித்திரனில் வெளிவந்தது. இதைத்தொடர்ந்து இவர் எழுதிய மேலும் ஏழு சிறுகதைகள் மித்திரன் வாரமலரிலும், சிந்தாமணி பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன.

கவிதைகளில் பரவிக்கிடக்கும் அதே எளிமையும், யதார்த்தமான அணுகுமுறையும் இவரது சிறுகதைகளிலும் சிதறிக் கிடக்கின்றன. தனிமனித பலவீனங்களும், போராட்டங்களும், சமுதாயத்தின் குறைபாடுகளும், அவலங்களும் இவரது கதைகளில் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன என்னும் வார்த்தைகளை விட குத்திக் காட்டப்பட்டிருக்கின்றன என்னும் வார்த்தைப் பிரயோகம் அதிகப்பொருத்தமாக இருக்கும்.

குறிப்பாகக் கூறப்போனால் ''ஏமாற்றங்கள்'' என்னும் சிறுகதையில் எடுத்துக் காட்டப்படும் ஜெகதாம்பாள், ரவீந்திரன் அரைகுறை மனிதர்களின் குறுகிய, ஆரோக்கியமற்ற மனநிலைகளும், 'தவறு யாரிடம்?' என்னும் கதையில் சித்தரிக்கப்படும் நிலாமதியின் உளப்போராட்டங்களும் ''நகரவாசிகள்'' ''அவள்போட்ட சபதம்'' ஆகியவற்றில் வெளிச்சப்படுத்தப்பட்டிருக்கும் சமுதாய அவலங்களும் ஆசிரியரின் சமுதாய சீர்திருத்த நோக்கங்களையும், யதார்த்த அணுகுமுறையையும் எடுத்துக் காட்டுகின்றன.

அன்றாடப் பிரச்சினைகளின் தகிக்கும் வெப்பத்தால் அன்று கலை வரண்டும், சிந்திக்க மறுப்பதால் புல்மூடியும் கிடக்கும் இன்றைய தலைமுறையில் இதய நிலங்களிலே குளிர்ந்த நீராக ஊற்றெடுத்து, பாதை சமைத்து, நீரோடையென ஓடத்தொடங்கியிருக்கும் இவரது சிந்தனைத் துளிகள் எதிர்காலத்தில் வெள்ளமாகப் பெருக்கெடுத்து பூமியை நிரப்பட்டும் எனக் கலைத்தாயின் அத்தனை புதல்வர்கள், புதல்விகளின் சார்பிலும் இவருக்கும் இனிய வாழ்த்துக்கூறி, இவரது இந்தப் புதிய முயற்சிக்குக் கட்டியங் கூறி வரவேற்கிறேன்.

**கவிஞர் இளையவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. "நகர வாசிகள்"

"சுகந்திக்கு கொழும்பு நகரத்தை பார்க்க சந்தோஷமாக இருந்தது. அவளை விட அழகாக ஆடை அணிந்து இருந்தாலும் அவள் அழகு அழகுதான் பின்னழகை மட்டுமே வைத்து தனது சொந்த ஊரில் பல ஆண்களை மயங்கடித்திருக்கிறாள்.

ஆனால் ஆண்களை அவள் அவ்வளவாக விரும்புவது இல்லை. ஒரு தட்வை கண்டிக்கு போகும் போது ஒரு இளைஞன் லேசாக காலை சுரண்டியதற்கு சட்டென கன்னத்தில் அறைந்து விட்டாள்,

அப்போது கூட இருந்தவள் அம்மா. இரண்டு வருடம் முடிந்துவிட்டது. இப்பொழுது என்ன செய்வாளோ...

புடவைகடை விளம்பரத்திற்கு ஏற்றது போல் நிறைய பெண்களும், ஆண்களும் நவீனமுறையில் ஆடை அணிந்து இருந்தார்கள். அன்று கொழும்பில் ஏதோ விசேட நிகழ்ச்சி நாள். பஸ் எல்லாம் ஒரே சனக்கூட்டம்.

ஆனாலும் புதிதாக கொழும்பை பார்க்கையில் ஒரு சொர்க்கம் போல் தோன்றியது. அப்பா கையை பிடித்து பஸ்ஸில் ஏற்றினார். பஸ்ஸில் நுழைவதற்குள் சேலை முந்தானை நழுவியது. கூட்டத்திலும் சரிசெய்து கொண்டாள்.

பஸ் புறப்பட்டதும் தான் நகரத்தின் நரகவேதனையை உணர ஆரம்பித்தாள். ஜன்னல் வழியாகப் பார்த்தால் எங்

பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் கட்டிடங்களும், செயற்கை காட்சிகளும் அவளின் இத யத்தை கவர்ந்தன.

பக்கத்தில் இருந்தவர் நெரித்து இடித்து உரசிக்கொண்டு இறங்கினார். ஒருவர் இறங்கியதற்கு ஒரு பட்டாளமே ஏறியது. அதில் ஒருவன் அழகாக ரஜினிகாந்த்போல இருந்தான் ஒரு தடவை அவளை பார்த்து விட்டு திரும்பிகொண்டான்.

விண்ணப்பத்திரம் கவனம் என்று உட்கார்ந்திருந்த அப்பா சைகை காட்டினார். சுகந்தி தலையாட்டிக்கொண்டு பையைத்தொட்டுப் பார்த்துக்கொண்டாள். ரஜனிகாந்த் போன்ற இளைஞன் (கோபு) பின்னால் நிற்பது அவளுக்கு தெரியாது.

காலில் ஏதோ ஒரு கால் தொடுவதை உணர்ந்து விருட் டென்று நகர்த்தி விட்டாள். மறுபடியும் கால் உரசியது. நகர்த்த இனி இடமில்லை ''சீ'' என்று சொல்வது தவிர அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

சரி கொஞ்சம் தூரம் தானே என்று பொருட்படுத் தாமல் விட்டு விட்டாள். சுரண்டி சுரண்டி கால் பெருவிர லுக்கு வந்து விட்டது. எரிச்சலாக இருந்தது சுகந்திக்கு.

மினி பஸ் வேறு மெதுவாக ஓடுகிறது. கால் மெது வாக கணுக்கால் வரை வந்துவிட்டது. தர்மசங்கட மான சுகந்தி அப்பாவிடம் சொல்ல எண்ணித் திரும்பினாள் அப்பா அவள் சைகை காட்டினாலே புரிந்து கொள்வார். ஆனால் அவர் வழுக்கை கூட இவள் கண்ணில் படவில்லை.

அடுத்த சீட் பெண்ணிடம் தெரிவிக்கலாமா... என்று கையை நீட்டினாள். அவள் அணிந்து இருக்கும் அரைகுறை யான ஆடை சுகந்திக்கு இன்னும் ஆத்திரத்தை உண் டாக்கியது.

அவளுக்கு நேராக நின்றிருந்தவன் அவள் அணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் அரைகுறையான ஆடைக்கு இடையில் தெரியும். அங்கங்களான சுவாரசியமாக ரசித்துக்கொண்டிருந்தாள்.

ஆண்கள் மட்டுமே காரணம் இல்லை என்று புரிந்து கொண்டு திரும்புகையில் கோபு முகத்தைப் பார்த்து விட்டான்.

அதற்குப் பிறகு மனசு கஷ்டப்படவில்லை என்ன வேண்டுமானாலும் செய்யட்டும் என்று விட்டுவிட்டாள். அதனால் அவனின் சேட்டைகள் அதிகரித்தன. சுகந்திக்கு கோபம் உச்சக்கட்டத்தில் இருந்தது.

அவனை அடித்து கொல்லும் அளவிற்கு ஆத்திரம் வந்தது ஆனாலும் மனதை கட்டுப்படுத்திக்கொண்டாள்.

அடுத்த பஸ் நிலையத்தில் இன்னும் கூட்டம் ஏறி நெருக்கம் கூடியது கோபு ஏதோ தனி அறை மாதிரி நினைத் துக்கொண்டான் போல கட்டிக் பிடிக்காத குறையாக அவ னின் சேட்டைகள் அதிகரித்தன.

அவள் யாரிடமும் சொல்லவும் முடியாமல் தவித் தாள் அந்த நேரம் திடீரென்று பிரேக்போட்டதில் எல் லோரும் சீட்டில் முட்டிக்கொண்டார்கள். கோபு அதுதான் சமயம் என்று கொஞ்சம்போல இருந்த இடைவெளியையும் மறைத்துநெரித்தான்.

பக்கத்தில் நின்ற பல பேருக்கு விஷயம் தெரிந்து விட் டது. வயது வந்தவர்கள் எல்லோருக்கும் கோபம் அவளே பேசாமல் இருக்கிறாள் நமக்கு எதற்கு வீண்வம்பு என்று அவர்களும் கண்டும் காணாதது போல் இருந்துவிட்டனர். ஒரு வேளை அவளும் இதற்காகத்தான் வந்திருப்பாள் என்று இன்னும் சிலர் தப்பாக நினைத்துக்கொண்டனர்.

அப்பா அருகில் வந்து கோபுவின் சேட்டைப் பிடித்து அறையும்வரை சுகந்திக்கு அப்பா அருகில்வந்தது தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்டா நீ சேட்டை பண்ணா பண்ண அவள் பேசாமல் சும்மா இருக்கவும் அவள் உன் விருப்பத்திற்கு இணங்கி விட்டாள் என்று நினைத்துக்கொண்டாயடா?

அவளால் பேச முடியாதுடா அவ ஊமைப்பொண்ணுடா'' என்று சோகமும் கோபமும் ததும்பக் கத்திக் கொண்டு கோபுவை மொத்துமொத்து மொத்தினர் சுகந்தியின் அப்பா.

இதனைக் கேட்டு அருகில் இருந்தவர்களும் நன்றாக மொத்தினார்கள். அப்பாவின் தோளில் சாய்ந்து சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதாள்.

...ம் ... ...த்தில் வாழ்ந்தால் இவ்வாறான நரக வாழ்க்கையை தினமும் அனுபவிக்க நேரிடும் என்ற அச்சம் கொண்டு அவள் ஊருக்குத் திரும்பிச்செல்ல முடிவு செய்துவிட்டாள்.

## பேசும் உள்ளங்கள்-:

1. ''நகரவாசிகள்'' சின்னஞ் சிறுகதை நன்றாகவே இருந்தது.

ஏ. ஏ. அப்துல் ஸலாம்,
ஸஹீனா ஏ. ஸலாம்
பெந்தெனிகொட
29-7-1990 சிந்தாமணி

2. ''நகரவாசிகள்'' கதையில் இடம்பெற்ற அம்சங்கள் போல்தான் பொதுவாக எங்கும் நடைபெறுகிறது! இதை எடுத்துக்காட்டிய க. அமிர்தலிங்கத்திற்கு (ஜீவகவி)க்கு எனது பாராட்டுக்கள்!

செல்வி சேவுகன் விமலா,
கலகா குரூப்
29-7-1990 சிந்தாமணி

3. ''நகரவாசிகள்'' சின்னஞ் சிறுகதைக்கு எனது பாராட்டுக்கள்!

பரீக்கா அரிபின்
பதுளை.
29-7-1991 சிந்தாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அவள் போட்ட சபதம்

ராதாவுக்கு வியர்த்துக் கொட்டியது.

கணவனது வேண்டுகோளை மீறவோ அன்று தவிர்க்கவோ முடியவில்லை.

ஆனால்;

யாரைப் பார்ப்பதில்லை என முடிவு செய்திருந்தளோ அவனைப் பார்த்து பணம் வாங்கப்போவது என்றால்...?

'ராதா...'

பாலு தீனமாக அலறினான்.

கோபு ரொம்பவும் நல்லவன். எனக்காக எதுவும்செய்வான். டாக்டர் ராஜ் சொன்னதைக்கேட்டாய் அல்லவா? இது நான் கடைசி முயற்சி இந்த மருந்தின் விலை மிகவும் அதிகம் அதற்கு பணம் தேவை கோபு மட்டும் உதவி செய்யவில்லை என்றால்...?''

அவனது விழிகள் பரபரத்தன. உண்மைதான். மூன்று மாதகாலமாக பாலு நோயோடு போராடுகிறான்.

ராதா-

நல்ல அழகு.

படைத்தவன் அழகைக் கொடுத்தானே யொழிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொடுக்கவில்லை.

பள்ளி ஆசிரியர் நல்லசிவத்தின் ஐந்து பெண்களில் மூத்தவள் ராதா தான்.

எல்லோருமே கல்யாணத்துக்கு காத்திருக்கும்போது ராதாவின் வாழ்வுக்கு வழிசெய்ய கோபு தானாகவே முன் வந்தான்.

அவன் நல்லசிவத்தின் முன்னாள் மாணவன்.

ஆனால் இன்று.

தொழில் அதிபர் தேவசகாயத்தின் ஒரே புதல்வன் உழைக்கவேண்டும் என்ற எண்ணமே கிடையாது. காரணம்.

பணம் காய்க்கும் தொழில்கள் பல உண்டு வறுமையே வாடாத மேனி, செல்வச்செழிப்பின் வனப்பு ஆனால்.

பெண்கள் அவனைக் கண்டால் ஓடி ஒளிவார்கள். கோழிக் குஞ்சை தூக்கிச் செல்லும் வல்லூறு போன்று அழகான பெண்களைக் கண்டால் விடமாட்டான். அவனது அடாவடித்தனமான செயல்களுக்கு அடியாட்கள் வேறு பணம் இருந்தால் பத்தும் செய்யலாம் என்ற நிலை தட்டிக் கேட்க யாருமில்லை என்ற அகங்காரம்.

ராதா மீது அவனுக்கு ரொம்ப நாட்களாக கண்.

ஆனால்,

அழகைக்கொடுத்த ஆண்டவன் நெருப்பான உள்ளத்தையும் கொடுத்து விட்டான்.

அன்று...

ஊரையடுத்த குளத்தில் தோழிகளோடு குளித்து விட்டு வந்துகொண்டிருந்தாள் ராதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிளின் ஒலிகேட்டு அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

அங்கே கோபு ஒய்யாரமாக காட்சி தந்தான்.

'ஏய் ராதா! இங்கே வா...! அவனது முரட்டுக் கரம் ராதாவின் பொன் மேனியை சுற்றிவளைக்க கண் இமைக்கும் நேரத்தில் அவளது கரம் கோபுவின் கன்னத்தில் 'பளார்' என ஒன்று கொடுக்க, தோழிகள் ''கலகல''வென சிரிக்க எரிமலையாக காணப்பட்ட கோபு 'அடியே என்னையா அடித்தாய். என்றாவது ஒரு நாள் என் விருந்துக்கு உணவாக உன்னை ஆளாக்காவிட்டால் என் பெயர் கோபு அல்ல...'' என்று சீறினான்.

போடா என்னை தொட நீ நினைத்தால் உன் உயிர் அங்கே இருக்காது...''

ராதா கோபத்தின் உச்சியில் நின்றாள்.

மோட்டார் பைக்கை ஒரு உதை விட்டான் கோபு.

அதன் பின்பு

பாலு கோபுவின் கம்பெனியில் வேலை பார்ப்பவன். அவனது கல்யாண செலவுகள் அனைத்தையும் கோபுவே ஏற்றுக்கொண்டான். திருமணமானதும் கோபு ஆசிரியர் குடும்பத்துக்கு விருந்து வைத்தான். ராதாவை ஓரக் கண்ணால் பார்த்து சிரிக்கவும் செய்தான்.

அவளது நெஞ்சு அடைக்கும் நிலை. அப்பா கோபுவை கடவுளாகவே நினைக்கவே அவளால் எதுவும் செய்யமுடியவில்லை.

ஆனால் இன்று,

கோபு கொடுத்த விருந்துக்குப் பின் பாலு நோய் வாய்ப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாள் உடல் இளைத்தது. எத்தனையோ டாக்டர்கள் பார்த்து விட்டனர். இறுதியாக ராஜ் மருந்து எழுதிக்கொடுத்தார். ஆனால் விலை...

குதிரை விலையாக காணப்பட்டது.

''ராதா...''

பாலு தீனமாக திரும்பவும் சொல்லவே சிந்தனையை சிதறவிட்டு கோபு வீட்டை நோக்கி ஓடினாள்

அங்கே, வேலைக்கார மாயாண்டி ராதாவைப் பார்த்ததும் பவ்யமாக சொன்னான். ''எசமான் மாடியில் இருக்கிறார்'' என.

கதவைத் திறந்தாள் ராதா. சுழல்கின்ற நாற்காலியில் அமர்ந்தவாறு சிகரெட் புகையை வளையமாக்கிக் கொண்டிருந்தான் கோபு.

அமைதியாக நின்றாள் ராதா. விழிகளாலேயே அவளை அங்குலம் அங்குலமாக ரசித்தான். அவனை நிமிர்ந்துபார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தாள் ராதா.

''என்றைக்காவது ஒரு நாள் நீயாக இங்கு வருவாய் என எனக்குத் தெரியும்''

''நானாக வரவில்லை. அவர்தான் போகச்சொன்னார்.

கடகடவென சிரித்தான் கோபு! அவளுக்கு வியர்த்துக் கொட்டியது.

''உன் கணவன் பிழைக்கவேண்டும்! இல்லையா''

அவள் வெறுமனே தலையை ஆட்டினாள்.

''எனக்கென்ன தருவாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் விழித்தாள்.

''என் சபதம் நிறைவேற வேண்டும்! இந்தா பணம்...'' பணக்கட்டை (கரன்ஸி கட்டை) மேசை மீது வைத்தான்.

கணவனது உயிரா? கற்பா? அவள் உள்ளம் போராட்டக்களமாகியது.

அவன் எழுந்தான் 'ராதா' உன் மீதுள்ள ஆசையால் தான் உன் கணவனது உணவில் கொடுமையான விஷம் வைத்தேன்! நீ மட்டும் கொஞ்சம் மனசு வைத்தால் விஷ முறிவுக்கு மருந்து நானே தருவேன்! இதோ பார்! இதுதான்!'

அவன் கொஞ்சம் கொஞ்சமாக அவளை நோக்கி வந்தான்.

கதவு பூட்டி இருந்தது.

மாயாண்டி கெட்டிக்காரன்! கதவை பூட்டி விட்டான்''

மறுகணம்,

மேசைமீது இருந்த மதுவை கிளாஸில் ஊற்றி 'மடமட' வென குடித்து முடித்தான்.

'ராதா'! ஓடி விடலாம் என நினைக்காதே! வலையிலே சிக்கியமான்! தூண்டிலில் அகப்பட்ட மீன். கூண்டிலே அடைப்பட்ட கிளி தப்ப முடியாது! கோபு குறி வைத்தது இதுவரை தவறியது இல்லை.''

அவனது வெறி கொண்ட கரங்களில் அவள் அகப்படும் நேரம் ... தள்ளாடிய அவன் காலில் ஏதோ இடறவே தடுமாறி மேசை மீது சாய்ந்தான். அப்போது மேசையில் இருந்து மது போத்தல் உடைந்து அவனது மார்பை முத்தமிட' இரத்த வெள்ளத்தில் மிதந்த அவன் ''மாயாண்டி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வீரிட்டு அலறினான்.

எல்லாமே ஒரு வினாடியில் ஏற்படவே, மறுகணம் ரத்த வெள்ளத்தில் மிதந்த கோபுவை சுமந்தவாறு அவனது இம்பாலா கார் மருத்துவமனையை நோக்கி ஓடியது.

தலைவிரி கோலமாக நின்ற அவள், மேசை மீது இருந்த விஷ முறிவு போத்தலை எடுத்துக்கொண்டு டாக்டர் சொன்ன மருந்தை வாங்க பணத்தோடு வீடு நோக்கி ஓடினாள்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஏமாற்றங்கள்

அன்று வழக்கம் போல் பிற்பகல் மூன்று மணி தேநீர் நேரத்தில் சுமதியைத் தேடி வந்த ரேகாவுக்கு, அவள் மத்தியானம் சாப்பாடு கொண்டு வந்திருந்த டிபன் கெரியர் பிரிக்கப்படாமல் அப்படியே இருந்தது கண்டு திகைத்தாள்.

ஏதோ பலமான வேதனை சுமதியைத் தாக்கி இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட ரேகா மெதுவாக அவ்விடம் பேச்சுக்கொடுத்தாள். நெடு நேரம் எதுவும் பேசாது உட்கார்ந்திருந்த சுமதி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ரேகா பொறுமையாக உட்கார்ந்திருந்தாள். வெகு நேரம் கழித்து சுமதி கூறிய தகவல் அதிர்ச்சி அடையக் கூடியதாக இருந்தது.

ரவீந்திரன் - சுமதி தம்பதிக்குத் திருமணமாகி கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டது. ஆனால் அவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் ஏற்படவில்லை.

சுமதியைச் சென்ற வாரம் பரிசோதனை செய்த பெண் டாக்டர், 'அவளுக்குக் குழந்தைப் பாக்கியம் ஏற்பட வழி இல்லை' என்று தீர்மானமாகத்தெரிவித்து விட்டார். அதனைக் கேட்ட சுமதி மனம் நொந்து போனாள். ரவீந்திரன் மிகவும் வேதனைப்பட்டான். இவர்கள் இரண்டு பேரைவிட ரவீந்திரனின் தாயார் ஜெகதம்பாள் மிகவும் அதிர்ந்து போனாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகதம்பாளுக்கு ரவீந்திரன் ஒரே மகன். அவர்கள் குடும்பம் தழைக்க எப்படியும் தனக்குப் பேரன் வேண்டுமென்ற ஆர்வத்தில் இருந்தாள்! சுமதி மூலம் தன் குலம் தழைக்க வழியில்லை என்று தெரிந்ததும் ஜெகதம்பாள் மிக வேதனைப்பட்டாள்.

ஜெகதம்பாளின் தங்கை ஒருத்தி கண்டியில் இருந்தாள். அவள் கொழும்பு வரும்போது எல்லாம், எத்தனை நாளைக்கு பேரக் குழந்தை இல்லாமல் வாழப்போகிறாய்?'' என்று கேட்டு அவளைக் குத்திக் காட்ட ஆரம்பித்தாள்.

ஜெகதம்பாளும் பல நாட்கள் ஆலோசித்து முடிவில் தன் மகனிடமே 'சுமதியைக் கைவிட்டு விட்டு வேறொருத்தியை மணந்து கொண்டால் என்ன?' என்று கேட்டே விட்டாள். ரவீந்திரன் இதைப் பலமாக எதிர்த்தான்.

நாள் செல்ல...... நாள் செல்ல ஜெகதம்பாளின் நச்சரிப்புக்கு ரவீந்திரன் வளைய ஆரம்பித்தான். தரகர் மூலம் பெண் பார்க்க ஏற்பாடுகளை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்தாள் ஜெகதம்பாள்.

இரகசியமாகத் தன் மகனுக்குத் திருமணத்தை முடித்து விடுவதென்றும், ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்து சுமதியை வேறிடத்துக்குப் போய் இருக்கச் சொல்வதென்றும் முடிவெடுத்திருந்தாள். சுமதிக்குப் பரிந்து கொண்டு பேச அவளுக்கு உறவினர் என்று எவருமில்லை. இதனால் தைரியமாக சுமதியை உதறி விட முடியுமென்ற நம்பிக்கையுடன் தனது ஏற்பாடுகளைத் தரகருடன் கலந்து ஜெகதம்பாள் செய்து கொண்டிருந்தாள்.

முதல் கட்டமாக ரவீந்திரன் மூலம் தனது ஏற்பாட்டை அதாவது அவன் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள இருப்பதை சுமதியிடம் தெரிவிக்க ஏற்பாடு செய்தாள். குழந்தை பிறக்க அவள் லாயக்கில்லை என்பதை இதற்குக் காரணம் காட்டச் சொன்னாள்.

91822
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி அன்று காலை அந்தத் தகவலைத் தன் மனைவி சுமதியிடம் கொஞ்சம் கூட கலங்காது அவள் மன நிலை பற்றி கவலைப்படாது பட்டெனச் சொல்லிவிட்டான் ரவீந்திரன்.

இதைக்கேட்ட சுமதி பெரும் அதிர்ச்சியுடன் அழுது கொண்டே அலுவலகம் சென்றாள். மத்தியானம் உணவு சாப்பிடவேண்டுமே என்ற எண்ணமே இல்லாமல் அதிர்ந்த நிலையில் தன் எதிர்காலத்தைப் பற்றி எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

எல்லாவற்றையும் ரேகாவிடம் சொல்லி அழுதாள். ஆத்திரமும், அதிர்ச்சியும் அடைந்தாலும் அடுத்து என்னசெய்வதென்று புரியாமல் குழம்பினாள்.

தன்னுடன் நான்கு ஆண்டுகள் அன்பாக நடந்து கொண்ட கணவன். குழந்தை பிறக்காதென்ற ஒரே காரணத்துக்காக தன்னை உடனடியாகக் கைவிட முன் வந்து தன்னை அவமானப்படுத்திய செயலை அவளால் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை.

ஏதோ ஆறுதல் சொல்லி ரேகா சுமதியை அனுப்பி வைத்து விட்டுத் திரும்பினாள்......

வீட்டுக்குத் திரும்பி வந்த சுமதி அந்த நிமிடம் முதல் அந்த வீட்டில் வேண்டப்படாத ஒரு நபராகக் கருதப்பட்டாள். அதுவரை அன்பாக பேசிக்கொண்டிருந்த கணவன் ரவீந்திரன் கூட அவளைத் கண்டாலே முகத்தைக் கடுகடு வென வைத்துக் கொண்டான்! அவளிடம் நேரிடையாகப் பேசுவதைத் தவிர்ந்தான். இத்தனை சிறுமைகளையும் பொறுத்துக்கொண்டு இருக்க அவளால் முடியவில்லை.

திட்டமிட்டிருந்தபடி ரவீந்திரன் ஜெகதம்பாளிடம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து சுமதியிடம் கொடுக்கச் சொல்லி, உடனே அந்த வீட்டை விட்டு வெளியே

2600C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

சென்று விட வேண்டுமென்ற எச்சரிக்கை செய்யும்படியும் சொல்லி விட்டான். தன்மகன், தன் கைக்குள் விழுந்துவிட்டான் என்று குதூகலித்த ஜெகதம்பாள், தன் மகன் இட்ட கட்டளைகளை உடனே நிறைவேற்றினாள்.

அன்றிரவு சுமார் பத்து மணியளவில் அவளை வீட்டை விட்டு துரத்திவிட்டு கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டனர். நிர்க்கதியான நிலையில் சுமதி நேரே தன் தோழி ரேகா வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

மறுநாள் உடனடியாக சுமதியை ஆறு மைல் தூரத்தில் வெள்ளவத்தையில் இருந்த பெண்கள் விடுதி ஒன்றில் தங்க ரேகா ஏற்பாடு செய்துவிட்டாள்.

அங்கிருந்து வழக்கம்போல தன் அலுவலகத்துக்குப் போய்க்கொண்டிருந்தாள் சுமதி ரேகா காட்டிய ஹாஸ்டல் வாழ்க்கையில் நிம்மதியாக இருந்தாள்.

ரவீந்திரன் தனது இரண்டாவது திருமணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்.

சுமதி தங்கியிருந்த பெண்கள் விடுதியில் பல பெண்கள் அங்கே தங்கிப் படித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் பட்டப் படிப்புக்காகப் படிக்கும் மாணவிகள் அவர்களுடன் நெருங்கிப் பழகி ஆறுதல் பெற்றுக் கொண்டிருந்தாள் சுமதி.

பெண்கள் விடுதியில் தங்கி கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்த சாந்தினி என்பவள் சாவகச்சேரியைச்சோந்தவள் அவள் ஆரம்பம் முதல் சுமதியிடம் மிக அன்பாகப் பழகிக்கொண்டிருப்பவள்.

ஒரு நாள் சாந்தினியைப் பார்ப்பதற்காக அவளது சகோதரன் அந்த விடுதிக்கு வந்து சேர்ந்தான். அவன் யாழ்ப்பாணத்தில் சில வர்த்தக நிறுவனங்களைச் சொந்தமாக வைத்துக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தினி தன் சகோதரனிடம் சுமதியின் சோகக் கதையை எடுத்துக் கூறினாள். அவனுக்கு சுமதி மீது இரக்கமும், அனுதாபமும் ஏறபட்டது,

அடுத்த இரண்டு தினங்களின் ரவீந்திரனுக்குத் திருமணம் நடக்க ஏற்பாடாகிருந்தது. அந்தத் தகவலைகேட்ட சுமதி அடக்க முடியாத ஆத்திரத்தில் குமுறிக்கொண்டிருந்தாள்.

ரேகாவிடம் தன் கணவன் ரவீந்திரனுக்கு அடுத்தநாள் காலையில் நடக்க இருக்கும் திருமணம் பற்றி கூறி சுமதி ஆத்திரப்பட்டாள். அடுத்து ரேகா சொன்ன தகவல் சுமதியை ஆனந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

சாந்தினி, ரேகா, சுரேஷ் ஆகிய மூவரும் சேர்ந்து செய்த ஒரு ஏற்பாட்டின்படி ரவீந்திரனுக்கு இரண்டாவது திருமணம் நடக்கும் அதே நேரத்தில் விடுதி அருகில் இருக்கும் முருகன் கோவிலில் சுரேஷ் சுமதியைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறான். திருமணத்தின் பின் சுரேஷ் சுமதியை சாவகச்சேரிக்கு அழைத்துப் போய்விடுவான்.

இத் தகவலைக் கேட்ட சுமதி நம்ப முடியாதவளாக திணறினாள்.

இத்திருமணத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் ரேகா சாந்தினி உட்பட ஹாஸ்டல் பெண்கள் விரைவில் செய்து முடித்தார்கள்.

மறுநாள் காலை பத்துமணி அளவில் வெள்ளவத்தையில் உள்ள ஒரு கோயிலில் சுரேஷ் எல்லோர் முன்னிலையிலும் சுமதிக்குத் தாலி கட்டித் திருமணம் செய்துகொண்டான்.

ரேகா தன் தோழி சுமதியை கட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள். சாந்தினி சுமதிக்கு முத்தமிட்டு இனிய எதிர்காலத்துக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தாள். சோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாக முடிய வேண்டிய சுமதியின் வாழ்க்கை அவளது அந்தரங்கத் தோழிகளின் முயற்சியால் சந்தோஷமாக ஆரம்பமாகியது.

ஆனால் ஜெகதம்பாள் திட்டமிட்டிருந்தபடி ரவீந்திரனுக்கு இரண்டாவது திருமணம் நடக்கவில்லை. யார் மூலமோ ரவீந்திரன் தனது முதல் மனைவி சுமதியைத் துரத்தி விட்ட தகவலைத் தெரிந்து கொண்ட சம்பந்தி வீட்டார் இத் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை. தனதுபெண்ணின் எதிர்காலமும் சுமதி போல் ஆகிவிடுமோ என்று சம்பந்தி விட்டார். நினைக்க ஆரம்பித்தாள் பெண் கழுத்தில் தாலி கட்டவேண்டிய நேரத்தில் திடீர் குழம்பம் ஏற்பட்டு விட்டது.

சுமதி அதேயூரில் இருப்பதால் ஏதாவது பொலிஸ்கேஸ் என்று தொல்லைகள் வரக்கூடுமென்றும் கருதினார்கள் கதிகலங்கிய பெண்ணின் தந்தை உடனடியாக தன் பெண்ணை அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினார்.

திடீரென்று திருமணம் நின்று போனதால் பெருத்த அவமானப்பட்ட ஜெகதம்பாளும், ரவீந்திரனும் ஒருவாரம் வெளியே தலை காட்டவே இல்லை.

இந்த அவமானத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள எப்படியாவது சுமதியை மீண்டும் அழைத்து வந்து குடும்பம் நடத்துவது தான் ஒரே வழியென்ற முடிவுக்கு ரவீந்திரனும், ஜெகதம்பாளும் வந்தார்கள்.

முதலில் சுமதியைப் போய் பார்க்க நினைத்த ஜெகதம்பாள், தான் கூப்பிட்டு அனுப்பியதும் நாய்போல அவள் வீட்டுக்கு ஓடிவந்து விடுவாள் என்று நினைத்து தங்கள் வீட்டு வேலைக்காரியை அனுப்பி உடனே வீட்டுக்கு வந்து சேரவும்'' என்று மிரட்டும் வகையில் கடிதம் ஒன்று எழுதி அனுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வேலைக்காரி திரும்பி வந்து தெரிவித்த செய்தி ஜெகதம்பாளையும், ரவீந்திரனையும் அடியோடு நிலை குலையச் செய்தது. முன்தினம்தான் சுமதி சுரேஷுடன் தம் பதிகளாக சவகச்சேரிக்குப் பயணமானார்கள் என்ற தகவல் ஜெகதம்பாளை தலைகுப்புற விழச்செய்தது.

இப்பொழுது ரவீந்திரன் பக்கத்து வீடுகள், அந்தப் பாதையில் உள்ள மக்கள் அலுவலக நண்பர்கள் எல்லோராலும் கேலி செய்யப்பட்டு ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறான். ஜெகதம்பாள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கொண்டிருக்கிறாள்.

(யாவும் கற்பனை)

* * *

**பேசும் உள்ளங்கள்-:**

1. ''ஏமாற்றங்கள்'' சிறுகதை எம்மையெல்லாம் கவர்ந்தது.

நஸீரா, நசீர்தீன், பவ்தர்'
நல்லிமங்கொட

2. பெண்ணுக்கு ஒரு நீதி, ஆணுக்கு ஒரு நீதியா? என்பதனை அழகுற எடுத்திபம்பியது, ''ஏமாற்றங்கள்'' சிறுகதை சுமதியின் தோழிகளுக்கும் பாரட்டுக்கள்.

நவநீதா நெல்சன்
தலாங்கத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. மௌனம் ஏனோ?

ஒரு வாரமாகவே என்னோட மனம் சரியில்ல. எந்த ஒரு காரியத்தையும் என்னால சரியாச் செய்ய முடியல.

நான் மனதால நினைக்கிறதுக்கு முன் என்னோட பொண்டாட்டி மர்லியா அந்தக் காரியத்தைச் செஞ்சு முடிச்சிருப்பாள் குறிப்பறிந்து செயல்படுறதும் அவள யாரும் மிஞ்ச முடியாது. அவளுக்கு சப்தம் போட்டு பேசறதே பிடிக்காது, குரலில் ஒரு இனிமை.

அதிகம் பேசமாட்டா.நறுக்குத் தெரிச்சாப்போல அவ்வப் போது ரெண்டொரு வார்த்தை கூர்ந்து கவனிச்சாத்தான் அவ சொல்றத கேட்க முடியும்.

என் சிந்தனை கடந்த காலத்துக்குள் நுழைகிறது......

நான் ஓரமாகக் கத்துவேன். அதைவிட மோசம் என்னோட ரெண்டு தங்கையும் தம்பியும் நான் இல்லாத சமயங்களில் தனக்குத் தானே கத்திக்கொண்டிருப்பா. யாரும் எதிரில் இருக்கவேண்டுமென்று அவசியமில்லை!

என்னுடைய இயலாமையினால் அலுவலகத்தில் நான் வாங்கும் திட்டுக்கள் எல்லாம் வீட்டுக்கு வந்ததும் என்னை அறியாமல் வெடிக்கும்.

என்னிடம் நெருங்கவே எல்லோரும் பயந்தார்கள். மன நிலை சரியில்லையோ எனக்கு, என்று கூட எல்லோரும் நினைக்கும்படி நடந்து கொள்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள்' உறவினர்கள் எல்லோரும் என்னிடம் பேசு வதைக் குறைத்துக் கொண்டார்கள்.

''ஒன்னக் கலியாணஞ் செஞ்சுக்கப் போறவ ஒன்னோட வாழ மாட்டா. ஒன்னோட கோபத்தைக் கண்டு ஓடியே போகப் போறா பாரு'' என்று என் உம்மா ஒரு நாள் வெளிப் படையாகவே சொன்னாள்.

எப்பவும் வீட்டுல காட்டுக் கத்தல்தான். சதா எரச்சல், சண்ட எங்க வீட்டில மட்டுமில்ல. எல்லா வீடுகளிலும்தான்.

என்னோட உம்மா சுபாவமாகவே ஒரமா பேசுற கொணம் உள்ளவங்க. என்னோட வாப்பா ஏகப்பட்ட கடன் களை வைச்சுட்டு ஒரு நாள் சொல்லாம கொள்ளாம ஓடிப் போயிட்டாரு.

ரெண்டு, மூ று வீடுகளில சமையல் செஞ்சு கல்யாண வீடுகளில ஒழைச்சு எங்கள பெ ழக்க வைச்சு கடன்களை யும் அடைச்சு... அப்பப்பா... சொன்னாலும் தாங்க முடி யாத தொயரத்த அனுபவிச்சாங்க உம்மா.

என்னுடைய மனம் பேசிக்கொண்டிருந்தது.

தன் ஆற்றாமை வெடிக்கும் போதும் தன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிய என் வாப்பாவை நினைக்கும்போதும் படபட வென்று பொரிந்து தள்ளுவா உம்மா!

காதுகள் செவிடாகும்படி கத்துவாள். என்னையொத்த வர்கள் சுகமாய், ஆடம்பரமாய் இருக்கும்போது, நான் மட் டும் ஏழ்மையில் உழலுவதப் பார்த்தும், கூடவே தம்பி தங் கையும் பார்த்ததும் நானும் வெடிப்பேன்.

''ஹோ'' வென்று கத்துவே . படித்து வேலைக்குப் போய் என் தம்பி தங்கைகளை நான் தான் காப்பாற்ற வேண்டுமென்ற போது சதா எரிச்சல்தான். கோபம்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு வீடுகள் கிடுகிடுக்க கத்துவேன்.

என் உம்மா வயதானதால் வெளியில் வீடுகளில் வேலை செய்ய முடியவில்லை. எதற்கும் என் கையையே எதிர்பார்க்க வேண்டிய நிலைமை. எங்கே என்னிடம் தன் கோபத்தைக் காட்டினால் நான் பிய்த்துக் கொண்டு போய் விடுவேனோ என்று பயம்.

கலியாணம் ஒன்னுதான் கொரச்சல் எனக்கு. எனக்கு கீழே இருக்கிற பிசாசுகள கரையேத்தி, என்னோட கடன்கள் அடச்சு நான் கலியாணம் பண்ணிக்கறதுக்குள்ள, கெழவனாயிடுவேன். எல்லாத்துக்கும் மேலா வரப்போறவ எப்படியிருக்கப் போறாளோ? என்னோட முன்கோவம் கண்டதுக்கெல்லாம் எரிஞ்சு விழும் சுபாவம். இதெல்லாத்தையும் அனுசரிச்சா போவாளா?

நினைக்க, நினைக்க மறுபடி இனம்தெரியாத வெறுப்புத்தான் வந்தது. இந்த நிலையில் ஒரு கலியாணத்தில் மர்லியாவைப் பார்த்தேன். பின் பல தடவைகள் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்திருக்கிறாள்.

வாய் திறந்து பேச மாட்டாளா? என்ற ஏக்கம் கலியாணம் முடிவதற்குள் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி பேச முயற்சி செய்தேன்.

அவள் அழகு என்னை வசீககரித்தது வாய் திறந்தால் அந்தக் குரல் ஒரு சுகனுபவம் குரலினிமை என்னை அவள் பால் ஈர்த்தது. நறுக்குத் தெறித்தாற் போல் அளவோடு மிக மெல்லிய குரலில் பேசும் சுபாவம் எனக்கொரு பிரமிப்பை ஏற்படுத்தியது. இவ்வளவு இனிமையாக மெது வாய்க் கூடப் பேச முடியுமா என்ன?

'ஹோ' வென்று கத்தியே பழக்கப்பட்ட என் மனம், என் குடும்பம், சுற்றுப்புற சூழ்நிலைகள் மத்தியில் அப்படி ரெண்டாம் பேருக்குக் கூட என்ன பேசுகிறோம் என்று தெரியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மர்லியாவை விரும்பியது.

''ஏய் மர்லியா ஒன்ன எங்கெல்லாந் தேடறது?'' என்று வந்தார் ஒரு பெரியவர்.

''ஏன் அப்படிக் கத்திப் பேசுறீங்க மாமா? மெல்ல பேசினா என்ன? அப்படிக் கத்திப் பேசறவங்களைக் கண்டா எனக்குப் பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியாதா?'' என்றாள்.

''ஐயாம் சொரி மர்லியா?'' என்றார் மாமா.

''இவள் எனக்குக் கிடைப்பாளா;'' என்று ஏங்கிய துண்டு!

என் கனவு நனவாகியது.

மர்லியா வந்த பின் வீட்டு சூழ்நிலையே மாறியது. மாற்றியமைத்தாள்.

என் முன்கோபம். எடுத்த தெற்கெல்லாம் வெடிக்கும் குணம் கொஞ்சம் கொஞ்சமாய் மறைய ஆரம்பித்தது,

என்னையும் நேசிக்கும் என் பேரிலும் அனுதாபம் காட்டும் ஒரு ஜீவன் இருக்கிறதே என்று எனக்குப் பெருமை. தம்பி, தங்கைகள் கூச்சல் அடங்கியது. உம்மாகூட மருமகள் பொறுப்பில் எல்லாவற்றையும் விட்டு விட்டு அப்பாடா என்றிருந்தாள். அவள் கேட்டது கிடைத்தது. தம்பி, தங்கைகளுக்குத் கூடத்தான்.

ஆனால் சன நெருக்கடி நிறைந்த தெருவில் ஒரே இரைச்சல் பல போர்ஷன்கள் உள்ள வீட்டில் எப்போதும் சந்தைக் கடை கூச்சல், இவைகளை மர்லியாவினால் பொறுக்க முடியவில்லை. ஒரு அமைதியான பிரதேசத்துக்குக் குடி பெயர்ந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலைகிறது.

அப்படிப்பட்ட மர்லியா...இப்போது ஏன் கத்துகிறாள்? நான் மெல்லிய குரலில் எது சொன்னாலும் காதில் விழாதது போலிருக்கிறாள். ஒரு தடவைக்கு ரெண்டு தடவைகள் கத்திக் கத்தி எந்த ஒரு விஷயத்தையும் சொல்ல வேண்டி யிருக்கிறது.

வேண்டுமென்றே செய்கிறாளா? இல்லை என்னை அலட்சியப்படுத்துகிறாளா என்று தெரியவில்லை.

இரண்டு மூன்று முறைகள் கத்திய பின் மெதுவாய் வந்து 'ஏன் இப்படிக் கத்தறீங்க? மெதுவாப் பேசக்கூடாதா? என்றாள். சில வருஷங்களாய் அடங்கியிருந்த என் கோபம் மறுபடி பீரிடுகிறது.

மூதேவி! எத்தனமொற கூப்பிட்டாலும் வர்ரதில்ல. எதச் சொன்னாலும் காதுல வாங்கிக்கிறதில்ல. ஒரு அலட்சிய சொபாவம் வந்திரிச்சி ஒனக்கு.

இதையும் காதில் வாங்கிக் கொண்டாளா என்று தெரிய வில்லை. சிரித்துக் கொண்டே ''கம்''மென்று போய் விடு கிறாள்.

என்னை அலட்சியப்படுத்துகிறாள் என்ற எண்ணமே எனக்கு வந்தது. நாளுக்கு நாள். அது வலுவடைகிறது.

''ஒம் பொண்டாட்டிக்கு வேலைக்குப் போய் நெறைய சம்பாதிக்கிறோம்னு ரொம்பத்தான் திமிர். எதையுமே காதுல போட்டுக்கிறதில்ல. ரொம்பத்தான் அலட்சியப்படுத் தறா?'' என்றாள் என் உம்மா ஒரு நாள்.

தம்பி, தங்கைகள் 'மதினி எங்கள லச்சியம் பண்றதில்ல நானா' என்று புகார் சொன்னார்கள்.

இவள் அழகில், குரலினிமையில், அடக்கமான சுபாவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் எல்லாவற்றையும் விட ரெண்டாம் பேருக்குக் கூடத் தெரியாமல் மெதுவாய்ப் பேசும் பண்பில் மயங்கி சீதனம் இல்லாமல் கல்யாணம் செய்துகொண்டது தப்பென்று இப் போது எனக்குப் புரிந்தது.

அன்று உம்மா கிணற்றடியில் வழுக்கி பெருங் கூச்ச லோடு கீழே விழுந்திருக்கிறாள்! அக்கம் பக்கமுள்ளவர்கள் விழுந்தடித்துக்கொண்டு பதை பதைப்புடன் வந்தபோது கூட மர்லியா வரவில்லை. தன் அறைக்குள்ளே அடைந்து கிடந்திருக்கிறாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டு நான் ஆஸ்பத்திரிக்குள் போவதற்குள் நிலைமை, விபரீதமாகி பெருத்த ரத்தசேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தான நிலைமை ஏற்பட்டு விட்டது.

''பல தடவை பார்த்தாச்சு. நாளுக்கு நாள் ஒன்னோட அலட்சிய சொபாவம் அதிகமாயிட்டே வரது. நீயும் ஒரு மனுஷியா? ஒன்னோட வாழறதே பாவம். ஒழுஞ்சி போ...'' என்று பலர் முன்னிலையில் கத்தினேன்.

மெல்ல விசும்பினாள்.

''என்ன மன்னிச்சிடுங்க.. நான் ஒரு உண்மையை ஓங்க கிட்டேயிருந்து மறைச்சிட்டேன்...

மூணு மாசத்துக்கு மின்னால வந்த வெஷ ஜொரத்துல, என் காது செவிடாப் போச்சு. சரியாயிடும்னு நெனச்சி எம் மேல புடிச்சது ரெண்டாம் பேருக்குத் தெரியாம நானே மருந்து செஞ்சுக்கிட்டேன்.

நீங்க யாரு எது பேசினாலும், மெதுவாப் பேசினா அப்ப அப்ப எனக்குக் கேட்காது... உங்க உம்மா கெணற் றடியில விழுந்ததும் எனக்குக் கேட்கல!

மத்தவங்க பதபதச்சு ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன பின்னாலதான் விஷயத்த கொஞ்சம் யூகிக்க முடிஞ்சுதுங்க. என்ன மன்னிச்சிடுங்க'' என்றாள், மர்லியா.

இப்படி அவள் சொ[illegible] து [illegible] [illegible] ஆகி இருக்கக் கூடாதா?'... என்று தான் மர்லியாவை மன்னிக்கத் துணிந்த என் உள் மனம் கேட்டது.

(யாவும் கற்பனை)


எமது அடுத்த வெளியீடு

இத்திருநாட்டின் பரந்து வாழும் இளம் கவிஞர்கள் பத்து பேர் இணைத்து வழங்கும் கவிதைத்தொகுதி

"யாகங்கள்"

(தொகுத்து வழங்குபவர் ஜீவகவி)

அவரின் முயற்சியில் நந்தவன புஷ்பங்கள், சிறகுகள், மூன்றாவதாக 'பயணங்கள்' வெளிவரவுள்ளது. நந்தவன புஷ்பங்கள், சிறகுகள் தேவையானோர். தொடர்பு கொள்ளவும்

K. AMIRTHALINGAM
(JEEVAKAVI)

103/B, Baba Pillai Place
Grandpass Road
Colombo-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தவறு யாரிடம்?

ஒரு வாரமாக விடாது பெய்த அடை மழை அன்று தான் சிறிது நின்றிருந்தது. மழை நின்றாலும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் மட்டும் அப்படியேதான் இருந்தன. தடைபட்டுப்போயிருந்த மின்சாரம் இன்னும் வரவில்லை.

வீடுகளுக்குள் அடைந்து கிடந்த மக்கள் வெளியே வந்து தங்கள் அவசர வேலைகளைக் கவனித்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

ஜன்னலருகே அமர்ந்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள் நிலாமதி. வெளியே கப்பியிருந்த இருளையும் விடப்பெரிய இருள் அவளுடைய மனதை மூடியிருந்தது.

அன்று காலை என்ன வார்த்தை சொல்லிவிட்டான் சீலன். 'உன் பிள்ளையாக இருந்திருந்தால் இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்வாயா' என்றல்லவா கேட்டு விட்டான்.

மோகனை நான் என் பிள்ளையாகத்தான் நினைத்து நடந்து கொள்கிறேன் என்பதை அவர் மனதில் எப்படி நான் புரியவைப்பது?' என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டு மனம் புழுங்கிப் போனாள் அவள்.

சீலனை அவள் கைப்பிடித்து: அவன் மனைவி என்னும் உரிமையுடன் அவன் வீட்டில் நுழைந்த போது மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வயதுக் குழந்தை. இரண்டாம் தாரமாக போகி றோம் என்று தெரிந்திருந்தே திருமணத்துக்கு சம்மதித்திருந் தாள் நிலாமதி, மூத்தவளின் குழந்தைக்குத் தாயாக இருந்து தன்னுடைய முழு அன்பையும் தர முழுமனதுடன் முன் வந் திருந்தாள் அவள். ஆனால் அந்தக் குழந்தையின் பிஞ்சு நெஞ்சிலே யார் விஷ வித்தை ஊன்றி விட்டிருந்தார்களோ தெரியவில்லை.

வெறுப்பையே அவள் மீது காட்டி வந்தான் மோகன். முதலில் அதிர்ச்சியைக் கொடுத்தது. பிறகு சகஜமாகி எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல் பழகிப்போய் விட்டது. திருமணமாகி அவள் அந்த வீட்டிற்கு வந்த இந்த ஐந்து வருடகாலத்தில் அவள் மனதில் அவளைப் பற்றிய தவறான நினைப்பு ஒரு பெரிய மரமாகவே வளர்ந்தது. ஒரு விரோ தியை போலவே அவளை நினைத்தான் அவன்.

அவனைக் குழந்தை என்று கருதி ஏதாவது சமாதான மாகப் பேசி அவனை அரவணைத்துக் கொள்ளலாம் என்று அவள் நினைத்தாலும் அதற்கும் பிடிகொடுக்காமல் நழுவி விடுவான் மோகன்.

இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டபோதே இந்த மாதிரியான அனுபவங்களை ஏற்கவேண்டி வரும் என்பது அவளுக்குப் புரிந்து போய்விட்டது. அவைகளின் கணம் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று நிமிர்ந்து நடந்தாள் நிலாமதி. ஆனால் இன்று...அவள் கணவனே என்ன ஒரு கேள்வி கேட்டுவிட்டான். 'உன் பிள்ளையாக இருந்திருந்தால்...'

அவனைக் கைப்பிடித்து அவள் மனைவி என்ற ஸ்தா னத்தில் உள்ளே நுழைந்துவிட்ட போதே மோகனை தன் பிள்ளையாகத் தானே நினைத்து நடந்து வந்திருக்கிறாள்.

மோகன் குரோதமாக நடந்து கொள்வதை சகித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு குழந்தை தானே பெரியவனானால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொள்வாளே! ஆனால் என்னவாயிற்று?

பிடிவாதத்தால் அவன் அவளை அலட்சியப்படுத்தி அவன் விருப்பம் போல நடந்து இப்படி ஒரு துன்பத்தை வரவழைத்துக் கொடுத்துவிட்டானே.

இரண்டு நாட்கள் முன்பு வானமே பொத்துக் கொண்டு விட்டது போல பேயாய் மழை பெய்து கொண்டிருந்த போது தடதடவென்று ஓடிவந்தான் மோகன்.

'வேண்டாம் மோகன். ஓடி வராதே! வழுக்கிடப் போறது' என்று நிலாமதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்று அதே வேகத்தோடு மாடிப்படிகளில் அவன் ஏறினான். ஈரக் கால்கள் படிகளில் பதியாமல் போகக் கால் வழுக்கி கீழே விழுந்தான்.

பதறிப்போய் விட்டாள் நிலாமதி. ஓடிச்சென்று அவனை அள்ளிக்கொண்டாள். தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது, இரத்தக் கசிவில் முடிகள் பிசு, பிசுவென்று ஒட்டிக் கொண்டிருந்தன. வீட்டிற்கு அருகே இருந்த மருத்துவமனைக்கு அவனைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

'மூளையிலே நல்லா அடிபட்டிருக்கு. அம்மா. உயிர் பிழைச்சாலும் பையன் நல்ல நினைவோட இருக்கமாட்டான்.' என்று சொல்லி உடனே கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொல்லி விட்டார் டாக்டர்.

சீலனுக்குத் தகவல் அனுப்பி அவன் வரும்வரையில் காத்திருந்து டாக்டர் சொன்ன விவரங்களைச் சொன்னதும் தான் சீலன் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

'தரை ஈரமாக வழுக்கல் அதிகமாக இருக்கும்போது மோகனைக் கண்டித்தாவது ஓடாமல் தடுத்திருக்க வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாமா நீ? ஓடிச்சென்று அவன் மாடிப்படியிலிருந்து விழும் வரையில் அலட்சியமாகத் தானே இருந்திருக்கிறாய்? உன் பிள்ளையாக இருந்திருந்தால் இப்படி அலட்சியமாக நடந்து கொள்வாயா?'

அந்த வார்த்தைகள் அவள் மனதை ஊசியாகக் குத்திய வேளையிலும் அதன் வலியைப் பொறுத்துக்கொண்டு கேட்டாள். 'எப்படியோ அவன் கீழே விழுந்து அடிபட்டு இருக்கிறான். சீக்கிரமாக அவனை நாம ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போகணும். உடனே அங்கே சிகிச்சை செய்தால் குணமாகிப் பிழைச்சிடுவானில்லையா? நானே அங்கே அவன் பக்கத்தில் இருந்து அவனைக் கவனிச்சுக்கிறேன்.

உடனே சீலன் ஏளனமாக, 'வீட்டிலே இருந்த குழந்தையை ஓடிப்போய் விழாமே கவனிச்சுக்க உன்னாலே முடியல்லே. வேண்டாம். அவன் தொந்தரவு இல்லாமே நீ வீட்டிலேயே சௌக்கியமாயிரு. நான் இருந்த கவனிச்சுக்கிறேன்'' என்று கிளம்பினான்.

பெரிய ஆஸ்பத்திரியில் மோகனை சேர்த்து விட்டுத் தன் அலுவலகத்துக்கும் நீண்ட விடு முறைக்கான விண்ணப்பத்தை அனுப்பிவிட்டான்.

நேற்று மோகனைப் பார்க்க அவள் ஆஸ்பத்திரிக்குப் போன போதுகூட 'இருக்கானா போயிட்டானான்னு பார்க்க வந்தியா?'' என்று தானே கேட்டான் சீலன்,

நிலாமதிக்கு மனம் வெறுத்துப் போயிற்று. ஆண்கள் சுயநலமிகள். தன் சுயநலத்துக்காக வேஷம் போடத்தெரிந்தவர்கள், என்று மனம் பொங்கியது.

மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் நிலாமதி தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்.

அவளது உண்மை மனதை அறிய அவனால் முடியவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையே என்று ஏங்கினாள்,

சிகிச்சை முடிந்தது.

டிக்கட் வெட்டப்பட்டு மோகனை வீட்டுக்கு அழைத்து வந்தான் சீலன், அவனை அழைத்து வரப்போவதைப் பற்றி அவன் நிலாமதிவிடம் முன் கூட்டியே சொல்லவில்லை.

'சின்னம்மா வரலியாப்பா' என்று சுயநினைவுடன் மோகன் கேட்டபோது. ஆத்திரத்தோடு தான் சீலன் அவனைப் பார்த்தான்.

''அவளைப் பற்றி உனக்கென்ன?' என்றான் வெறுப்போடு.

'இல்லேப்பா! ஒவ்வொரு சமயமும் சின்னம்மா என்னைக்திருத்த முன் வந்தபோது நான்தான் பிடிவாதமா இருந்து, வெறுத்து அவர்களை ஒதுக்கி மனசை நோகடிச்சிட்டேன்.

ஆரம்பத்திலிருந்தே அப்படி ஒரு வெறுப்பை அவங்க மீது வளர்க்க நீங்க எல்லோருமே தூண்டு கோலாய் இருந்தீங்க.

அன்னிக்கும் சின்னம்மா, ஓடி வராதேன்னு சொன்ன போது நான் அலட்சியப் படுத்தினேன்.

ஆனால்...எப்படி ஆயிற்று? இப்பொழுது தான் அவங்க மனசு புரிந்தது! என்ற மோகன், வீட்டுக்கு வந்ததுமே ''சின்னம்மா!' என்று கூவியவாறு ஓடி வந்தான்.

பூஜை அறையில் அவனுக்காக பிரார்த்தனை செய்து கொண்டிருந்த நிலாமதி. மோகன்! என்று எழுந்தாள். மறுகணம் அப்படியே சலனமற்றவளாக நிலத்தில் சாய்ந்தாள். அவள் இறுதி மூச்சு அத்துடனேயே அடங்கிப்போய் விட்டது.

தன்னை உணர்ந்தவன் ஒருவன் இருக்கிறான் என்ற மகிழ்ச்சி, அவளைப் பொங்க வைத்து அடக்கி விட்டதா...?

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. கொலையும் செய்வாள் பத்தினி

சுகந்தி வீட்டில் விளக்குத் தோரணங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. மண்டபம் முழுவதும் வண்ணவிளக்குகள் இறைந்து கிடந்தன.

விருந்து என்று வந்தால் பணத்தை வாரி இறைப்பது அவர்கள் வழக்கம், கறுப்பில் கொஞ்சம் குறைவதில் யாருக்கும் நஷ்டமில்லை.

பிரமாண்டமான வீட்டின் இரண்டு பக்கங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் மத்தியில் தன் லான்சஸர் காரை செருகிய சாந்தி முன் கதவைத் திறந்து கீழே இறங்கினாள், மறு புறத்தில் சுரேஷ் கீழே இறங்கி கதவை அடித்தான். அந்த சத்தத்திற்கு பத்து பேர் திரும்பி பார்த்தார்கள்.

சாந்தி அவனை கடுமையான வார்த்தைகளால் எச்சரித்தாள்.

அவன் கோபப்படவில்லை, நடந்தான் மேரியின் ஆட்டுக்குட்டியாக தொடர்ந்தான்.

சாந்திக்கு வயது இருபத்திரெண்டு தான்! சராசரி மலையாள பெண்களை விட சற்று அதிக சதை வைத்திருந்தாள். மாநிறக்காரி. கழுத்திலும், கைகளிலும் அந்தஸ்தின் அடையாளமாக தங்க நகைகள். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பது அவளின் அசைவ சித்தாந்தம். மண்டபத்தில் உள்ளே சென்றதும்:;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது இன்னுமொரு தோழி பிருந்தா, 'எப்படி இருக்க சுகமா சாந்தி' என்றாள்.

இன்னுமொரு நண்பர் ,நீர் எப்படி இருக்கிறீர்' என்றான்.

'வெரி பைன் என்றபடி கைகுலுக்கினாள்.

மெழுகுவர்த்தி பொருத்தப்பட்ட கேக்குக்கும் மகனுக்கும் இடையில் நின்றிருந்த சுகந்தியின் இடத்துக்கு விரைந்து சென்று 'நல்வரவு சுகந்தி' என்றார்கள்,

நண்பர்கள் கூட்டத்துடன் அவள் நகர்ந்து சென்று எல்லோரும் கூட்டமாக அமர்ந்து ஆங்கில மொழியில் பேசி ரசித்து சிரித்தார்கள்.

சுரேஷுக்கு ஆங்கிலம் தெரியாததால் அவன் தனிமைப் படுத்தப்பட்டான். மூலையில் இருந்த கதிரையில் அமர்ந்தான்.

சாந்தி, சூழலுக்கு ஏற்றது போல் மாறிப்போனாள். விஸ்கியுடன் ஐஸ் கட்டியை போட்டு குடித்தாள்.

நரம்பை முறுக்கும் ஜோக்குகள் சொன்னாள். தொட்டாள். தொடப்பட்டாள்.

கார், மாடிவீடு, கைவளையல் போல் காசுக்கு வாங்கப் பட்ட தன் கணவனை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் மறந்து அரை மயக்கத்தில் மூழ்கி இருந்தாள்.

சுரேஷ் இனியும் பார்த்து சகிக்கமுடியாதென்று எழுந்து வாசலுக்கு வந்து விட்டான்,

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் பின் கதவைத் திறந்து சீட்டில் அடைந்தான். முன் சீட்டில் முகத்தைப் புதைத்துக்கொண்டு மனமெங்கும் அரித்துக் கொண்டிருக்கும் அவமான அலைகளில் மூழ்கிக் கிடந்தான்.

எத்தனை நேரம் அப்படி இருந்தான் என்பது அவனுக்கே தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மீண்டும் சந்திப்போம்'

'சந்திப்போம்'

திறக்கப்பட்ட முன் கதவின் வழியே நுழைந்த வார்த்தைகளுக்காக தலை நிமிர்த்தினான்.

சாந்தி முன் சீட்டில் அமர்ந்து இருந்தாள்.

கார் சாரதியை உசுப்பினாள். கார் புறப்பட்டது பத்து நிமிடத்தில் வீடு போய் சேர்ந்தார்கள்,

'இப்படிதான் வந்த இடத்தில் நாகரிகம் இல்லாமல் எழுந்து வர்றதா?' என்று கேட்டாள்.

'நீ ஆண். பெண் வித்தியாசம் இல்லாமல் குடிச்சிட்டு ஆடுவதை நான் பக்கத்திலிருந்து பார்க்கிறது தான் நாகரிகம் என்றால் அந்த நாகரிகம் என்கிட்ட இல்லாமல் இருக்கிறதே நல்லது.'

'மிஸ்டர் சுரேஷ்; நான் நாலு பேரோடு பேசுவது,இலேசாக குடிக்கிறதும் உங்க கண்ணுக்கு குடிச்சிட்டு ஆடுவதாகவா தெரிகிறது?'

'என் கண்ணுக்கு மட்டுமல்ல. யார் கண்ணுக்கும் அப்படிதான் தெரியும்.'

'மிஸ்டர், நீ சாப்பிடற சோறு, படுக்கிற மெத்தை, சம்பளம் வாங்கிற கம்பெனி... ஏன், உங்க குடும்பம் பிழைக்கிறதே எங்க அப்பா போட்ட பிச்சையில'

'சாந்தி'

'உஸ் கத்தாதே! ப்ரஷர், அல்சர், ஹார்ட் அட்டாக், எல்லாத்துக்கும் கோபம்தான் காரணம்.'

அவன் மௌனமானான்.

ஆரோக்கியத்தைக் கருதியதால் அல்ல. இயலாமையை எண்ணியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஷ் நல்ல அழகன்...உடற் கட்டமைப்பினாலும் நிறத்தினாலும் எவரையும் கவரக் கூடியவன்.

ஆனால்.

புத்தளத்தின் உள்ளடைந்த கிராமம் ஒன்றின் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, தகுதிக்கு ஏற்றதுபோல் கொஞ்சமாக படித்தவன். அவனைப் போலவே சகோதர் களும் வேலையின்றி இருந்தார்கள்.

எதிர்காலம் எப்படியென்ற கேள்விக்குறி, ஒருநாள் மாலையில் ஆச்சரியக் குறியாக மாறியது.

தூரத்து உறவினரான சுந்தரம்பிள்ளை தன் மகளுக்கு அவனை வரன் பார்க்க வந்திருப்பதாக சொன்னார்.

'அவனுடைய அம்மா மட்டும், 'சுரேஷ்க்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. அதுக்குள்ள எப்படி கல்யாணம் பண்றது?' என்று கேட்டாள்.

'இதுக்காக ஏன் கவலைப்படறீங்க? கொழும்பில் என்னு டைய ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தில் எவ்வளவோ பணம் புரளுகின்றது. அதைத் தவிர எனக்கு ஏகப்பட்ட பிசினஸ்.ஏதாவது ஒன்றுக்கு சுரேஷை பொறுப்பேற்க சொல் லலாம். உங்கள் இரண்டாவது மூன்றாவது பிள்ளைகளுக் கும் கூட என்னால வேலை தர முடியும்'

அந்த ஏழைகளால் சுந்தரம்பிள்ளையின் வார்த்தை களை நிராகரிக்க முடியவில்லை. பரிசாக நினைத்து பரிசம் போட்டார்கள்.

அன்று முதல் அவன் சாந்திக்கும், சுந்தரம்பிள்ளைக்கும் கொத்தடிமை ஆனான்.

கார் வீட்டை அடைந்து முற்றத்தில் நின்றது.

இறங்கினார்கள்.

உள்ளே போனார்கள்.

ஹாலில் வேலைக்காரன் இருந்தான் அம்மா தூங்கி விட்டாளா? சாந்தி நேரே அறைக்கு போய் உடை மாற்றிக் கொண்டாள். அடுக்களைக்கு போய் இரவு உணவு எடுத்துக் கொண்டாள்.

சுரேஷ் வேலைக்காரனிடம் 'அம்மா எங்கே?' என்று கேட்டான்.

'சமாஜத்துக்கு போனவங்க இன்னும் திரும்பி வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை.' வேதனையுடன் நேரே படுக்கைக்கு போய் விழுந் தான்.

நாகரிகம் என்ற பெயரில் தட்டுக்கெட்டு திரியும் மனைவி. மகனை பலி கொடுத்து குடும்பத்துக்கு வாழ்க் கையை வாங்கி விட்ட திருப்தியுடன், சமூகசேவை என்ற பெயரால் சமாஜத்தில் போய் அடுத்தவர் பிரச்சினையை இழுத்துப்போட்டுக் கொள்ளும் அம்மா, வேலைக்காரனைப் போல் அலட்சியமாக நடத்தும் சுந்தரம்பிள்ளை.

ஒரு நொடியில் இதையெல்லாம் உதறிவிட்டு கிராமத் துக்கு போய் விடலாம். அவனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியும். அம்மா அதிர்ந்து போவாள். தம்பிகள்தான் தவித் துப்போவார்கள்.

யோசித்தபடியே தூங்கிப் போனான்.

தள்ளு என்று கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு சுந்தரம்பிள்ளை உள்ளே வந்தார்.

சுரேஷ் கதிரையை விட்டு எழுந்தான்.

சுந்தரம்பிள்ளை எதிர்புற கதிரையில் உட்கார்ந்தார்.

நம்ம நிறுவனத்துக்கு கணக்கு பரிசோதகர்கள் வரலா மென்று ஒரு தகவல் கிடைத்து இருக்கு. சுந்தோரில் வைத்து இருக்கிற கணக்கு புத்தகங்கள் எல்லாம் திருத்தமா இருக்க வேண்டும். ஒரு சின்ன சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டால் ஒரிஜினல் கணக்கெல்லாம் அவர்கள் கையில் கிடைத்தால் நம்ம பணமும் போய், பெயரும் கெட்டுடும்.

சுரேஷ் எல்லாவற்றையும் மௌனமாக கேட்டுக் கொண்டு தலையசைத்தான். இன்னமும் அவன் நின்றிருந் தான்.

சுந்தரம்பிள்ளை அவனை உட்காரச் சொல்லவில்லை.

மேசை மீது அடுக்கிக் கிடந்த புத்தகங்களைப் புரட் டினார்.

'நாங்கள் ஏற்றுமதி செய்து கணக்குபோட கொடுத்த புத்தகத்தில் கணக்கு எல்லாம் செய்து முடிச்சுட்டியா?'

'பண்ணீட்டேன'

'எங்கே அந்த புத்தகம்'

சுரேஷும் தேடிப் பார்த்தான்.

வீட்டில வச்சு கணக்குப் பார்த்தேன். அதனால... அங் கேயே வைச்சிருப்பேன். இதயம் நடுங்கக் கூறினான்.

'புத்தகத்தை அங்கேயே வைத்துவிட்டு நீ மட்டும் எதுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக வந்த?' என்று உரைத்தார்.

'திறமை இல்லாத ஆட்கள் கிட்ட எல்லாம் பொறுப்பைக் கொடுத்தால் இப்படித்தான்.

அவன் மௌனமாக அவைகளை ஜீரணித்துக் கொண்டு ரிசீவரைப் பற்றினான். டயலைச் சுழற்றினான்.

தொலைப்பேசி மறுமுனையில் தொடர்ந்து ஒலித்தது. பதில் இல்லை.

'என்ன பதில் இல்லையா'?

ஆ'ஆமாம்'

'சரி, நீயே நேரில் போய் இருக்கா என்று பார்த்து எடுத்துவிட்டு வா' கட்டளைக்கு கீழ்ப்படிந்து கதவை இழுத்து வெளியேறினான்.

அங்கே வீட்டு கதவு சாத்தப்பட்டிருந்தது.

தூங்குகிறாளா?

காலிங் பெல்லை அழுத்தினான்.

கதவு திறக்கப்படவில்லை பதிலும் இல்லை மீண்டும் பெல்லை அழுத்தினான். நீண்ட நேரம்.

கதவை திறந்த சாந்தியின் முகத்தில் அதிர்ச்சி.

'என்ன இந்த நேரத்தில்' என்று குரல் பதறியது.

'கதவை திறக்க ஏன் இவ்வளவு நேரம்?'

'அது வந்து...ஒரு நண்பன் வந்திருக்கான். அவனுக்கு வீட்டைச் சுத்திக் காண்பித்துக்கொண்டிருந்தேன்...'

'இப்போ எங்கே உன் நண்பன்??

படுக்கை 'அறையில்'

அதிர்ந்தான். படுக்கை அறைக்கு விரைந்தான்.

அங்கே இருந்த நண்பன் அவனை விட இளைஞனாக இருந்தான்.

சுரேஷை பார்த்து அவனும் முகம் வெளிறினான்.

சந்தேகப் புழுக்கள் மனதைக் குடைய அவளிடம் கேட்டான். 'வீட்டில உன் நண்பனோட பேச வேறு இடம் கிடைக்கவில்லையா? எதுக்காக அவன் படுக்கை அறையில் உட்கார்ந்து இருந்தான். உனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு?'

'என்ன...என்னையே சந்தேகப் படுறீயா? உனக்கு எவ்

PUBLIC LIBRARY JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு தைரியம் இருக்கணும்? நான் யார் கூட வேண்டுமானாலும் படுப்பேன். உன்னால என்ன பண்ண முடியுமோ, பண்ணிக்கோ!'

அவனால் அந்த தாக்குதல்களைத் தாங்க முடியவில்லை.

மறுநாள் தாங்கமுடியாத நெஞ்சு வலியுடன் மார்பைப் பிடித்துக் கொண்டே மருத்துவமனைக்கு வந்தான்.

மருத்துவப் பரிசோதனைகளில் அவன் ஆரோக்கியமாகவே இருப்பதை அறிய முடிந்தது.

சுரேஷ் மனநல நிபுணரிடம் அனுப்பி வைக்கப்பட்டான்.

அங்கே அவன், அவனுள்ளிருந்த சோகக் கதையை கூறினான்.

...அவ பணத்தாலதான் என்னை மதிக்கவில்லை, கேவலமாக நடத்துகின்றாள் என்று நினைத்தேன். ஆனால்... அவ அத்தோட நிற்கவில்லை. கண்ட கண்ட ஆம்பிளைகளை விருந்து என்கிற பெயரில வீட்டுக்கு கூட்டிட்டு வந்து மேல விழுந்து பழகிறாள். கடைசியா நான் இல்லாத நேரத்தில் அந்தப் பையனோட படுக்கை அறையில் இருந்திருக்கா'

டாக்டர் அவனுக்கு சிகிச்சைகள் செய்து விட்டு, சாந்தியிடமே பேசி பார்த்து விடுவதென்று தீர்மானித்து அவளை வரவழைத்து விசாரித்தார்.

அவளோ, 'எங்க கல்யாணத்துக்கு முன்னால சதீஷ்னு ஒரு வசதியான குடும்பத்துப் பெண்களோட பழகி, அவங்களையும் அவங்க பணத்தையும் பயன்படுத்திக்கிறவன்... அவனோட எனக்கு தொடர்பு இருந்தது. பிறகு அவனோட கேரக்டரைப் புரிஞ்சிக்கிட்டதும் நான் விலகிட்டேன். விஷயம் எங்க வீட்டில தெரிஞ்சிது. அவசர அவசரமாக எனக்கு மாப்பிள்ளை பார்த்து, கிராமத்து சுரேஷை எனக்குக் கட்டி வைச்சிட்டாங்க. நாகரிகம் தெரியாத அவரோட வாழுறதும் வெளியில நாலு பேர் மத்தியில நடமாடறதும் எனக்கு அகௌரவமாக தெரிஞ்சுது. அதனாலதான் நான் அடிக்கடி சண்டை போடறேன். அவ்வளவுதான்! மத்தபடி நான் யாரோடயும் தவறான தொடர்பு வச்சிக்கிட்டா அதை யாராலும் தடுக்க முடியாது. அதில் என்ன தவறு?' என்று கேட்டாள்.

சாந்தி தன்னைத் திருத்திக்கொள்வதாக இல்லை.

சுரேஷுக்கோ தன் குடும்பம் பெற்ற திடீர் வசதிகளையும் மனைவியையும் உதறிவிட்டுப்போக தைரியமில்லை.

முடிவு?

அவளின் வக்கரிப்புகளுக்கு அவன் பலியாக வேண்டியது தான்! (யாவும் கற்பனை)

91822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வாழ்த்துக்கள்

நம்பிக்கையின் — நாணயம்—நந்தினி! திருமண நாளில் மணப்பெண்ணை அலங்கரிக்கும் ஒட்டியாணங்கள், நவராத்திரி பூஜைக்கான தெய்வச் சிலைகள், பெண்களுக்கான அலங்கார ஆபரணப் பொருட்கள், பிறேம் செய்யப்பட்ட தெய்வப் படங்கள், மற்றும் எவர் சில்வர் பாத்திரங்கள் அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்:

# NANDHINI TRADERS

No 70, Bonjean Road
Kotahena
Colombo-13

கண்டோர் மனதைக்
கவர்ந்திடும் வண்ணம்

உங்கள் கடைக்கு கச்சிதமாக
''பிட்டிங்ஸ்'' அடித்திட நாடுங்கள்

# Alu Premes Enterprises

Interior Decorators
201, Grandpass Road, Colombo-14
Phone: 541018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org